Chenkaantal
A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal

Volume - 1, Special Issue - 2, June 2022 E-ISSN: 2583-0481

Feminism in *Panchali Sabatham*

Dr. N. Kumari, Assistant Professor of Tamil, Auxilium College, Vellore-632 006, Tamil Nadu, India.
ORCiD: https: //orcid.org/0000-0002-7889-6164
DOI: 10.5281/zenodo.6790847

Abstract

One of the literary genres is epic. Most of the epic will feature poetry and prose. Epics are supplemented by short stories and biographies of various characters. Bharathiyar's 'Panchali Sapatham' is a small epic in verse form. Bharathiyar's poems, essays, and epics are all forms of feminism. Bharathi had a broad view of modern feminism before the emergence of feminism in the west. He relentlessly engaged himself in the effort to make it fully relevant to women and the development of society. This article explores the feminist views contained in the miniature epic 'Panchali Sabatham'.

Keywords: Bharathi, Feminism, *Panchali Sabatham.*
.

References

[1] Bharathiyar. *Bharathiyar Kavithaigal.* Vanathi Publisher, Chennai.
[2] Bharathiyar. *Panchali Sabatham.* Kazhaka Veliyudu.
[3] Sarala Rajagopalan. *Bharathi's Panchali Sabatham.* Barinilayam, Chennai.
[4] Vogel, D. Eve-the first feminist: John Milton's midrash on genesis 3: 6, Jewish Bible Quartetly, 40 (1), 19-24, 2012.
[5] We respect femininity- Prof. Sarojini is new. youtube/vMAyp5xzLz8 Accessed on 21 April 2022.

Author Contribution Statement: NIL.
Author Acknowledgement: NIL.
Author Declaration: I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

செங்காந்தள்

அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்

மலர் - 1, சிறப்பிதழ் 2, ஆனி 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

பாஞ்சாலி சபதத்தில் பெண்ணியம்

முனைவர் நா.குமாரி, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, அக்சிலியம் கல்லூரி, வேலூர்-632006, தமிழ்நாடு, இந்தியா.

ORCiD: https://orcid.org/0000-0002-7889-6164

DOI: 10.5281/zenodo.6790847

ஆய்வுச்சுருக்கம்

இலக்கிய வகைகளில் ஒன்று காப்பியம் ஆகும். காப்பியத்தின் பெரும்பகுதி செய்யுள் வடிவமாகவும் இடையே உரைநடையும் இடம்பெறும். காப்பியங்கள் சிறுகதைகளாலும் பல்வேறு மாந்தர்களின் வாழ்க்கைச் செய்திகளாலும் இணைக்கப்பட்டு வழங்கப்படுகின்றன. பாரதியாரின் பாஞ்சாலி சபதம் செய்யுள் வடிவில் அமைந்துள்ள சிறு காப்பியம் ஆகும். பாரதியாரின் கவிதைகள், கட்டுரைகள், காப்பியங்கள் என இம்மூவகை வடிவங்களுமே பெண்ணுரிமை குறித்த சிந்தனைகளாகவே இழையோடி நிற்கிறது. பெண்ணியம் குறித்த விசாலமானப் பார்வையைப் பாரதி பெற்றிருந்தார். அதனைச் சமுதாயம் முழுமைக்கும் உரியதாக்கும் முயற்சியில் அயராது தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். அவற்றுள் சிறுகாப்பியமான பாஞ்சாலி சபதத்தில் இடம்பெற்றுள்ள பெண்ணியக் கருத்துக்களை ஆராய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

திறவுச்சொற்கள்: பாரதி, *பாஞ்சாலி சபதம்*, பெண்ணியம்.

.

முன்னுரை

பெண்ணடிமைத் தனத்திற்கும் முக்கிய காரணம் பெண் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்காததே என்று வசைபாடுவார் பாரதி. பெண்கள் கல்வி கற்றால், வீடும் நாடும் சமுதாயமும் நலம் பெற்று முன்னேறும் என்றார்.விடுதலையையும் பெண்கல்வி மூலம் மட்டுமே தழைத்தோங்கச் செய்ய முடியும் என்று முழங்கியவர். "மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையை கொளுத்துவோம்" என்று பெண்ணுரிமைக்கு குரல் கொடுத்த பாரதி பெண்கள் வெற்றி பெற்றதாகவே வெற்றி முரசு கொட்டினார். "பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம் எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லை காணென்று கும்மியடி" என்று வீரகோசமிட்டார். "ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால் அறிவிலோங்கி இவ்வையம் தழைக்குமாம்" என்று புதிய பாரதம் படைக்க அறிவுறுத்தியவர் பாரதி. இவர் பாஞ்சாலி சபதம் என்னும் காப்பியத்தில் சுவை புதிது, பொருள் புதிது, வளம் புதிது, சொற் புதிது, சோதி மிக்க நவகவிதை, எந்நாளும் அழியாத மகா கவிதை என்று எளிய நடையில், அனைவரும் எளிதாக புரிந்து கொள்ளும் வகையில் மகாபாரதக் காவியத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதியுள்ளார். எனவே தான்

ஆய்வாளர் பாரதி வலியுறுத்திய பெண்ணியக் கோட்பாடுகளை ஆய்வுக்காகத் தேர்வு செய்திருப்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

நூல் அமைப்பு

பாரதி, பாஞ்சாலியின் சபதமே போருக்குக் காரணம் என நினைத்ததால் பாஞ்சாலி சபதம் என பெயரிட்டார். பாஞ்சாலி சபதத்தில் தன்னிகரற்ற தலைவியாக வீராங்கனையாக பாஞ்சாலி படைக்கப்பட்டுள்ளாள். அவளுடைய சபதத்தின், வஞ்சினத்தில் முக்கியத்துவத்தைக் கருதி இந்நூலிற்கு பாஞ்சாலி சபதம் என பெயரிட்டார் என்று க. ந. திருநாவுக்கரசு அவர்களும் கூறியுள்ளார். பாரதியார் பாஞ்சாலி சபதத்தை இரு பாகமாக அமைத்துள்ளார். முதல் பாகமாக துரியோதனன் சூழ்ச்சிச் சருக்கம், சூதாட்டச் சருக்கம் ஆகிய இரு சருக்கங்களையும் இரண்டாம் பாகமாக, அடிமைச் சருக்கம், திரௌபதியைச் சபைக்கு அழைத்த சருக்கம், சபதச்சருக்கம் ஆகிய மூன்று சருக்கங்களையும் அமைத்துள்ளார். ஒவ்வொரு பாகத்தின் தொடக்கத்திலும் இறைவணக்கம் பாடியுள்ளார். முதற் பாகத்தில் பிரம்மன், சரஸ்வதி ஆகிய கடவுளரையும் இரண்டாவது பாகத்தில் வாணியையும் வேண்டியுள்ளார்.பாரதக் கதை அனைவரும் அறிந்ததே எனினும், பாரதி புதிய வார்ப்பாகத் தன் நூலைத் தந்துள்ளார்.

பெண்ணியம் பற்றி அறிஞர்கள் கூற்று

பெண்ணியம் பற்றி எண்ணற்ற அறிஞர்கள் தங்கள் கருத்துக்களை பதிவு செய்கின்றனர். முனைவர் சரோஜினி புதியவன் என்பவர் பெண்ணியம் என்பது பெண்கள் இருக்கின்ற நிலையை எடுத்துச் சொல்வது; இருக்கவேண்டிய நிலை குறித்து சிந்திப்பது ; ஆய்வு செய்வது, பெண்களின் வாழ்க்கை நிலையை மாற்ற முயல்வது; அதற்கான செயல்பாடுகளில் ஈடுபடுவது என்கிறார். கேட்மில்டன் என்ற பெண்ணியவாதி, இந்த சமூகம் ஆண்களை அறிவு,போர், ஆற்றல், சக்தி, திறமை உடையவர்களாகவும் பெண்களை அமைதி, அறியாமை, கற்பு போன்ற பண்புடையவர்களாகவும் உருவாக்கி உள்ளது என்கிறார்.

பாஞ்சாலி சபதத்தில் பெண்ணியம்

பாரத நாட்டின் அடிமை நிலையைக் கண்ட பாரதியின் மனம் குமுறியது. மகாபாரதத்தில் வரும் பாஞ்சாலியின் கதையை மட்டும் எடுத்து பாஞ்சாலி சபதத்தை படைத்துள்ளார். துரியோதனனால் அடிமைப்படுத்தப்பட்ட பாஞ்சாலியை பாரத மாதாவாகவும் பாண்டவர்களை இந்தியர்களாகவும் உருவகம் செய்துள்ளார். மேலும் தருமனை பாரதத்தை ஆண்ட பண்டைய மன்னராகவும், கர்ணனை பிறப்பால் இந்தியனாக இருந்தாலும் ஆங்கிலேயரின் வலையில் சிக்கி சொந்த மண்ணுக்கே துரோகம் விளைவிப்பவனாகவும் படைத்துள்ளார். பாஞ்சாலி மன்னர்களின் மனைவி. அவளே துரியோதனனால் சபையில் மானபங்கப் படுத்தப்படுகிறாள். துகிலுரியப்படுகிறாள். மன்னர்களும், சான்றோர்களும், வீரர்களும் அதை தடுக்கவில்லை. மன்னரின் மனைவிக்கே இந்நிலை என்றால் சாதாரண பாமரப் பெண்களின் நிலையை எண்ணிய பாரதியார் பாஞ்சாலி சபதத்தைப் படைத்தார்.

சூதாடுதல்

துரியோதனனோடு தர்மன் சூதாடுகின்றான். இதில் தன் நாடு, நகர், தம்பியர் மற்றும் தன்னையும் இழக்கிறான். பின்னர் பாஞ்சாலியையும் பணயம் வைக்கிறான். இதனை,

> **ஆள் விற்றுப் பொன் வாங்கியே செய்த பூனை ஓர் ஆந்தைக்குப் பூட்டுதல் போல் கேள்விக்கு ஒருவரில்லை. உயிர்த்தேவியைக் கீழ் மக்கட்கு ஆளாக்கினான். (பாஞ்சாலி சபதம், பக்.118)**

என்று பாஞ்சாலியைத் தருமன் பணயம் வைத்ததைக் கூறுகின்றார். மேலும் பாரதியார், **செல்வக் குழந்தையினை விருப்புற்ற சூரியனுக்கே ஒத்த பந்தயம் மெய்தவப் பாஞ்சாலியோ? (பாஞ்சாலி சபதம், பக்.201)** என்றும் கூறுகிறார்.

பாஞ்சாலி நீதி கேட்டல்

பாஞ்சாலி சபையோரிடம் நீதி கேட்கின்றாள். **விதியோ கணவரே, அம்மி மிதித்தே அருந்ததியைக் காட்டியெனை வேதச்சுடர்த்தீ முன் வேண்டி மணஞ் செய்து பாதகர் முனிந்நாட் பரிசழித்தல் காண்பீரோ? (பாஞ்சாலி சபதம், பக்.208)** என்றாள். பாஞ்சாலி கேட்கின்ற கேள்விக்குப் பதில் கூறாமல் அனைவரும் மௌனமாக நிற்கின்றனர். அப்பொழுது பீசுமர் பதில் கூறுகின்றார்." ஒருவன் தன் தரத்தை விற்றிடலாம்; தானமென வேற்றவர்க்குத் தந்திடலாம் தன்னை அடிமையென விற்ற பின்னும் தருமன் நின்னை அடிமையெனக் கொள்வதற்கு நீதியுண்டு" எனக் கூறி தனது கையைத் தரும சாத்திரம் கட்டிப் போடுகிறது என்கிறார்.

பீமன் சினம் கொள்ளல்

பாஞ்சாலி கதறி அழுததைக் கண்ட பீமன் மிகவும் கோபம் கொள்கிறான். தருமனிடம் நியாயம் கேட்கின்றான். பாஞ்சாலியை எவ்வாறு பணயம் வைக்கலாம்? என்றும், நீ தருமத்தையே அழித்து விட்டாய் என்றும் கூறுகின்றான்." ஏது கருது வைத்தாய்? அண்ணே, யாரைப் பணயம் வைத்தாய்? மாதர் குல விளக்கை அன்பே வாய்ந்த வடிவழகை ஆடியிழந்து விட்டாய் தவறு செய்து விட்டாய் அண்ணே தர்மங் கொன்று விட்டாய்" என்று கூறுகிறான். மேலும் தவறு செய்தவனுக்குத் தண்டனையும் தரவேண்டும் என எண்ணுகிறான். இதனையே, "இது பொறுப்பதில்லை தம்பி எரிதழல் கொண்டு வா கதிரை வைத்திழந்தான் அண்ணன் கையை எரித்திடுவோம்" என்கிறார் பாரதியார். இவ்வாறு பீமன் சினம் கொள்கின்றான். அர்ஜுனன் அவனை ஆறுதல் படுத்துகிறான். இதனை "தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும்,தருமம் மறுபடி வெல்லும்" என்கிறார் பாரதியார்.

கர்ணண் எதிர்த்தல்

துரியோதனனின் சபையிலே பாஞ்சாலிக்கு ஆதரவாக கர்ணன் குரல் கொடுக்கின்றான். பாஞ்சாலியைச் சூதில் பணயம் வைக்க சாத்திரத்தில் இடமிருக்கிறது என்று கூறுகிறார்களே; அது விலைமாதர்க்கு விதித்தது. அதையே சாத்திரத்தில் புகுத்தி விட்டார்கள் என்கிறான். இதனை, **விலைமாதர்க்கு விதித்ததையே பிற்கால நீதிக்காரர் சொன்மெனச் சாத்திரத்தில் புகுத்திவிட்டார். (பாஞ்சாலி சபதம் பக்.214)** என்கிறார்.

பாஞ்சாலியின் வழக்காடும் திறன்

பாஞ்சாலி நீதியை நிலைநாட்ட அச்சத்தை உதறித் தள்ளினாள். பாஞ்சாலி தான் பாண்டவர்கள் சூதாட்டத்தில் தோற்ற அடிமையல்லள் என வாதாடினாள்.

- நாயகர் தாம் தன்னைத் தோற்ற பின் என்னை நல்கும் உரிமை கிடையாது என்ற புதிய சட்டத்தை வகுத்தாள்.
- அஃறிணைப் பொருட்களுடன் மனைவியையும் பணயப் பொருளாக வைப்பவனுக்குத் தான் மனைவியாக இருக்கவும் விரும்பவில்லை என்கிறாள். 3. சூதாட்டத்தைப் புலைத் தொழில் என்கிறாள்.
- தான் புவியையே தாங்கும் துருபதனின் மகளாகக் கன்னியாக இருப்பதையே விரும்புவதாக கூறினாள்.
- பேயரசு செய்தால் பிணந்தின்னும் சாத்திரங்கள் என்று சாத்திரத்தை இடித்துரைத்தாள். இவ்வாறு பாஞ்சாலி துரியோதனனின் சபையில் வழக்காடுகின்றாள்.

சபதம் செய்தல்

பாஞ்சாலி தன்னைத் துகிலுரித்த துச்சாதனின் இரத்தத்தையும், அவனைத் தூண்டிவிட்ட துரியோதனனின் இரத்தத்தையும் குழல் மீது பூசி என் தலைமயிரை முடிப்பேன் என்று சபதம் செய்கிறாள். இதனைப்,

> **பாவி துச்சாதனன் செந்நீர் அந்தப் பாழ்த் துரி யோதனன் ஆக்கை இரத்தம் மேவி யிரண்டுமங் கலந்து குழல் மீதினிற் பூசி நறுநெய் குளித்தே சீவிக் குழல் முடிப்பேன் யான் (பாஞ்சாலி சபதம் பக்.218)**

என்று சபதம் செய்கின்றாள் பாஞ்சாலி. இவ்வாறு பெண்ணினத்துக்கு இழைக்கப்பட்ட தீமைக்குப் பழிக்குப்பழி வாங்குகின்ற வரையிலும் கூந்தலை அள்ளி முடிப்பதில்லை என விரதம் மேற்கொள்கிறாள். மேலும் பாரதி தனது பாஞ்சாலி சபதத்தில் பெண் தெய்வங்களைப் போற்றிப் பெண் தெய்வ வழிபாட்டையும் செய்துள்ளார். பராசக்தி,காளி, சரஸ்வதி போன்ற பெண் தெய்வங்களை வழிபட்டுள்ளார்

காளி வழிபாடு

நமது பாரதத்தை பாரதத் தேவியாக மட்டுமல்லாது காளியாகவும் கண்டு மகிழ்கிறார் பாரதி. பாரதி பாஞ்சாலி சபதத்தைக் கூறத் தொடங்கும் போது, "தேவி திரௌபதி சொல்வாள் ஓம் தேவி பராசக்தி ஆணை உரைத்தேன்" என்று ஆணையிட்டு கூறத் தொடங்குகிறார். விடுதலைப் போராட்ட காலத்திலும் விடுதலை வீரர்கள் காளியிடத்தில் சபதம் செய்தனர். இதை நினைவு கூறும் வகையிலேயே பாரதி காளி பற்றிய பாடலைப் பாடியுள்ளார்.

பராசக்தி வழிபாடு

தெய்வப் பாடல்களில் அவர் அதிகமாக பராசக்தியைப் பற்றிப் பாடியுள்ளார். அவர் பார்த்த பொருள்கள் அனைத்தையும் பராசக்தியாகவே கண்டார். தேசம் முழுவதையும் தேவியின் வடிவமாகவே கண்டார்.பாரதியார் சக்திதாசன் என்ற புனைப்பெயரில் எழுதி

மகிழ்ந்தார். பாரதி பாஞ்சாலி சபதத்தின் இரண்டாம் பாகத்தைப் பராசக்தி வணக்கத்துடன் தொடங்கியுள்ளார். "ஈங்குணைச் சரணென் றெய்தினேன், என்னை இருங்கலைப் புலனாக்குதியே" என்று வணக்கம் கூறியுள்ளார்.

சரசுவதி வணக்கம்

அறிவு தெய்வமாகிய சரசுவதிக்கு வணக்கம் செலுத்தும் வகையிலும் பாடல்களைப் பாடியுள்ளார். "இன்றமிழ் நூலிது தான் புகழ் ஓய்ந்தினி தாயென்றும் இலகிடவே என்று வணங்கி பாடுகிறார். மேலும் இளமையிலேயே கவிபாடும் அருளையும்,பாவியம் படைக்கும் திறனையும் பெற அருள் புரிந்தவள் நீயே எனப் போற்றுகிறார். வாணியை சரண் புகுந்தேன் அருள் வாக்களிப்பாளெனத் திடமிருந்தேன் பேணிய பெருந்தவத்தாள் நிலம் பெயரளவும் பெயர் பெயராதாள் பூணியில் மார்பகத்தாள் ஐவர் பூவை திரௌபதி புகழ் கதையை" எனப் பாடியே பாஞ்சாலியின் சபதத்தைக் கூறத் தொடங்குகிறார். பாஞ்சாலி சபதம் முடிவில் தேவியை வணங்கியே முடிக்கின்றார்.

முடிவுரை

பெண் கூர்மையான அறிவுடையவள். அவளுடைய அறிவில் நீதி இருக்கும். தெளிவு இருக்கும். வாதத்திறமை இருக்கும் என்பதைப் பாஞ்சாலியின் வாயிலாக உணர்த்துகிறார். ஆண்மை எதை செய்தாலும் பொறுத்துக் கொள்ள வேண்டும் என்ற நீதியை பாஞ்சாலி எதிர்த்தாள். பெண்ணடிமை நீங்க வழிவகுத்தாள். பெண்ணுரிமைக்காக புரட்சிக்குரல் கொடுத்தாள்.

துணைநூற் பட்டியல்

[1] சரளா இராசகோபாலன். *பாரதியின் பாஞ்சாலி சபதம்.* பாரிநிலையம், சென்னை.

[2] பாரதியார். *பாரதியார் கவிதைகள்.* வானதி பதிப்பகம், சென்னை

[3] பாரதியார். *பாஞ்சாலி சபதம்.* கழக வெளீயீடு.

[4] வோகல் டி, ஈவ்-முதல் பெண்ணியவாதி: ஜான் மில்டனின் மிட்ராஷ் ஆன் ஜெனிசிஸ் 3:6, யூத பைபிள் குவார்டெட்லி, 40 (1), 19-24, 2012.

[5] பேராசிரியர்.முனைவர் சரோஜினி புதியவன். *பெண்ணியம் போற்றுவோம்.* – youtube/vMAyp5xzLz8 21 ஏப்ரல் 2022 அன்று அணுகப்பட்டது.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை.

கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை.

கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.